*1968 பிப்ரவரி 15]*

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** நஷ்டக்கணக்காக இருக்கிறதே என்பதற்காகத் தெரிவித்துக்கொண்டேனே தவிர வியாக்கியானம் செய்யவில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினைவைப் போடுங்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** நான் கேட்கும்போது ஏதோ என்ற ஒரு வார்த்தையைச் சொன்னேன். அதற்கு அமைச்சர் அவர்கள் ஏதேதோ என்று சொல்வது சரியல்ல என்று சொன்னார்கள். ஏதோ என்று சொன்னது நஷ்டக் கணக்காக இருக்கிறதே என்பதற்காகச் சொன்னேனே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்கு தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பர்சனல் எக்ஸ்ப்ளனேஷனு ?

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பனை ஏறுகிற தொழிலுக்கு லைசென்ஸ் முறை வைத்திருக்கிற காரணத்தினுல் அனுவசியமான முறையில் அந்த ஏழைத் தொழிலாவர்கள்மீது சந்தேகக் கேஸ்கள் போடுகிற வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, அந்த முறையை ரத்து செய்ய வேண்டுமென்று பலமுறை இங்கு கேட்டும் இதுவரை செய்யவில்லை. ஆகவே இந்த லைசென்ஸ் முறையை ரத்து செய்ய நமது அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இதுபோன்ற அனுமதிகள் வழங்கப்படுகிற நிலையில் கூட குறைகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அதுவும் இல்லை என்ற நிலை ஏற்படுமானுல் அந்தக் குறை மேலும் அதிகமாகிவிடும் என்ற அச்சம் காரணமாக அது அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லப்படுகிறது. வழங்குவதில் உள்ள நிர்வாகச் சிக்கல்களைக் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானுல் அவற்றை உடனடியாகத் தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அதை ரத்து செய்கிற உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினுக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## உ. அறிவிப்பு.

### உலகத் தொழில்-பொருட்காட்சிக்கு அழைப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு அறிவிப்பு. சென்னையில் அறிஞர் அண்ணு நகரில் நடைபெறுகிற உலகத் தொழில்-பொருட்காட்சிக்கு வருகை தரவேண்டுமென்று பேரவை உறுப்பினர்கள் எல்லோரையும் பொருட்காட்சித் தலைவர் அவர்கள் அழைத்துள்ளார்கள். எனவே, 16-2-1968, 17-2-1968 இரண்டு நாட்களிலும்

மாலை ஐந்து மணிக்கு பொருட்காட்சிக்குப் போக வரவும், பார்வையிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொருட்காட்சித் தலைவரின் அழைப்பை ஏற்றுக்கொள்ள விரும்புகிற மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவைச் செயலாளரிடம் நாளைக் காலை ஒன்பது மணிக்குள் தெரியப்படுத்தும்படியாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### 8. ஆளுநரின் பேருரைமீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, ஆளுநர் அவர்களின் பேருரையின்மீது விவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது. பத்து நிமிடங்கள் என்ற காலவரையறைக்குள் உறுப்பினர்கள் அருள் கூர்ந்து உரையாற்றும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

***திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியின் பேரில் ஆளுநர் அவர்களின் உரையின்மீது சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். பல வருடங்களாக இம் மன்றத்தில் ஆளுநர் உரையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதன்மீது விவாதங்களும் நடத்தி வந்திருக்கிறோம். ஆனால் இந்த ஆண்டு உரை மற்ற ஆண்டுகளைவிட நல்ல முறையில், அத்தனை பேர்களும் வரவேற்கத்தக்க அளவிற்கு நிகழ்த்தப்பட்டிருக்கிறது. அந்த உரையில் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் தேவைப்படுகிற அத்தனையும், சிறப்பாக முக்காலங்களையும், பற்றிக் குறிப்பிட்டிருக்கிற காரணத்தினால்—ஒரு சிலர் வேண்டாதவர்கள் அதைக் குறை சொல்வதும் எங்களைப் போன்றவர்கள் இருப்பதை எடுத்துச் சொல்வதும் என்ற முறையில் இருப்பதை எடுத்துச் சொல்லி இதில் சொல்ல விட்டு விட்டத்தை அரசாங்கத்திற்கு நினைவுபடுத்துவதும் எங்கள் கடமை என்ற காரணத்தினால் நானும் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் உரையில், (1) உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, (2) மொழி, (3) விவசாயம் இவைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது எனக்கு முன் பேசியவர்கள் நாட்டின் நிலைமைபற்றியும், கொள்கைகள் பற்றியும், நாட்டு மக்கள் எதை எதிர்பார்க்கிறார்கள் என்பது பற்றியும் இப்படிப் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி விட்டால் நானும் அவை பற்றி பேசிக்கொண்டு போவது நலன் பயக்காது என்பதினால் சில முக்கியமான கருத்துக்களை அதிலும் குறிப்பாக என் தொகுதி பற்றிய சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு நமது அரசு விவசாயத்திற்கு முதலிடம் தந்து, விவசாயிகளினுடைய மனம் புண்படாமல் இருப்பதற்கு அவர்கள் என்னென்ன கருதுகிறார்களோ, அவர்கள் என்னென்ன கேட்கிறார்களோ, அத்தனையையும் அரசாங்கம் ஏற்று அவர்களுக்கு உறுதுணையாக இருந்து விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்று எண்ணுகின்ற காரணத்தால், விவசாயத்திற்குப் புதிது புதிதாக எந்தெந்தக் கோணங்களிலே விவசாயத்தைப் பெருக்குவதற்குக் கடன் வேண்டுமோ அத்தனையையும் தருகிறார்கள்.